# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 569/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 2 P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மதுரைவீரன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 07.05.2026.

**எதிரி ஆஜர் / எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். முதல் நிலை காவலராக பணியில் இருந்த போது கடந்த 26.10.2026 ஆம் தேதி 17.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கோகுல கிருஷ்ணன் என்பவருடன் நானும் முதல் நிலை காவலர் கோபிநாத் ஆகியோர்கள் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து பணியில் இருந்த பொழுது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த போன் ரகசிய தகவல் மூலம் நானும் காவலர் கோபிநாத் என்பவரும் ஒரு பைக்கிலம் உதவி ஆய்வாளர் ஒரு பைக்கிலும் கணபதி பாளையம் ரவிசந்திரன் தோட்டம் அருகில் சென்று பார்த்த போது அங்கு ஒரு நபர் 7-8 லிட்டர் பிடிக்கக்கூடிய மண்பானையில் சுமார் 3 லிட்டர் தென்னை மரத்துக்கள் வைத்து உட்கார்ந்து கொண்டிருந்தவர் போலீஸ் பார்ட்டிகளை கண்டதும் அந்த இடத்தில் இருந்து ஓட முயற்சி செய்தவரை பிடித்து விசாரிக்க அவர் பெயர் கதிரேசன் த/பெ. முத்துசாமி என்றும் சொன்னார். பின்னர் அவரிடம் இருந்து தென்னை மரத்துக் கள்ளை பின்னர் எதிரியை கைது செய்து உதவி ஆய்வாளர் 18.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில்

கைப்பற்றி லேப்டாப்பில் டைப் செய்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். அங்கு பொதுமக்கள் யாரும் இல்லாததால் நாங்களே சாட்சிகளாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.1 என்று குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கு சொத்தை காவல் நிலையத்தில் வைத்து பாதுகாக்க இயலாத நிலையில் உதவிஆய்வாளர் காவல் ஆய்வாளருக்கு போன் செய்து கேட்டு காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் படி காவல் உதவி ஆய்வாளர் முன்பே வைத்து பானையை உடைத்து அங்கேயே 18.45 மணிக்கு மண் பானையை உடைத்தும் கள்ளை கீழே ஊற்றியும் அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தார். பொது ஜன மக்கள் சாட்சியாக யாரும் இல்லாததால் அதில் நாங்களே சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **அழித்தல் மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பற்றி அக்கம் பக்கம் விசாரித்து கொண்டிருந்தார். பின்னர் 19.00 மணிக்கு காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு காவல் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அவருக்கு உதவியாக நாங்கள் இருந்தோம். இது குறித்து காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. விற்ற இடம் சாலை ஓரம் அல்லது தோட்டத்திற்குள்ளேயா என்றால் தோட்டத்திற்கு உள். தனி நபர் தோட்டம் என்றால் சரிதான்உங்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததாக சொல்லி உள்ள நிலையில் எந்த இடம் என்பது குறித்து தகவல் கிடைத்ததா எந்த இடம் என்பது குறித்து தகவல் கிடைத்ததா என்றால் அது குறித்து எஸ் எஸ் ஐ கோகுலகிருஷ்ணன் என்பவருக்கு தான் தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்து பின்னிட்டு எவ்வளவு நேரத்தில் அங்கு சென்றீர்கள் என்றால் சுமார் 1/4 மணி நேரம்.
2. நீங்கள் எதிரியை பிடித்த இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லை என்றால் இரண்டு நபர்கள் இருந்தார்கள், அவர்களும் சென்று விட்டார்கள். பானையை உடைத்ததாக சொல்லியுள்ள நிலையில் சாட்சியாக அழித்தல் மகசரிலும் பொதுமக்கள் யாரிடமும் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். யாரும் இல்லை. இது கள் தான் என்பதற்கு எந்த ஆய்வுக்கு உட்படுத்தவில்லை என்றால் எஸ்ஐ சாருக்கு தான் தெரியும். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும்

சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.